


டிசெம்பர் 16 - 24

## திருவருகைக்கால நவநாள்

தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே, ஆமென்

அற்புதக் குழந்தை இயேசுவே! அடியோர் மேல் இரக்கமாயிரும். (மும்முறை)

## தொடக்கச் செபம்

ஆண்டவரே எங்கள் இறைவா, உம் திருமகன் கிறிஸ்துவின் வருகையை நாங்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கச் செய்தருளும் அவர் வந்து தட்டும்போது நாங்கள் வேண்டலில் விழித்திருப்பதையும் மகிழ்வோடு அவரது புகழ் பாடுவதையும் அவர் காண்பாராக. இயேசுவின் பிறப்புப் பெருவிழாவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் உம் மக்களை நீர் கண்ணோக்குகின்றீர் அதனால் இத்தகைய மாபெரும் மீட்பின் மகிழ்வுக்கு நாங்கள் வந்து சேரவும் இதைப் பெருமகிழ்வோடும் மேலான வேண்டலோடும் என்றுமே கொண்டாடவும் ஆற்றல் பெற அருள்புரிவீராக. தந்தையோடும், தூய ஆவியாரோடும், இறைவனாக என்றென்றும் வாழ்ந்து ஆட்சி புரியும் இயேசுவே. ஆமென்.

## ஓ முன்மொழிப் பாடல் 1

*ஓ வாரும், வாரும் **இம்மானுவேலே***
*இஸ்ராயேலை நீர் மீட்டருளுமே!*
*மா தெய்வ மைந்தன் தோன்றும் வரைக்கும்*
*உன் மக்கள் பாரில் ஏங்கி தவிக்கும்*
*மகிழ்! மகிழ்! இம்மானுவேல்*
*இஸ்ராயலே உன் மீட்பர் வருகிறார்*

முதல்வர்: **இயேசுவே மரியே,**

எல்லோரும்: **இயேசு மரி சூசை** (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கு தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக,
தொடக்கத்தில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக, ஆமென்.

**மன்றாடுவோமாக**

ஆண்டவராகிய இயேசுவே,
விரைந்து வாரும். காலம் தாழ்த்தாதேயும்.
உமது பரிவிரக்கத்தில் நம்பிக்கை கொள்ளும் நாங்கள் உமது
வருகையினால் ஆறுதலும் ஆதரவும் பெறுவோமாக.
உமது இறைச்சட்டத்தினால் எம்மை வழி நடத்தும்,
ஓ இம்மானுவேலே, எம்மை மீடக விரைந்து வாரும், ஆமேன்.

## ஓ முன்மொழிப் பாடல் 2

*ஓ வாரும் வாரும் தெய்வீக **ஞானமே***
*அனைத்தையும் படைத்தாளும் வல்லமையே*
*காண்பியும் உமதறிவின் பாதையை*
*அவ்வழியை நாங்கள் கற்று வாழவே*
*மகிழ்! மகிழ்! இம்மானுவேல்*
*இஸ்ராயலே உன் மீட்பர் வருகிறார்*

முதல்வர்: **இயேசுவே மரியே,**
எல்லோரும்: **இயேசு மரி சூசை** (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கு தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக, தொடக்கத்தில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக, ஆமென்.

**மன்றாடுவோமாக**

ஆண்டவராகிய இயேசுவே,
விரைந்து வாரும். காலம் தாழ்த்தாதேயும்.
ஒர் எல்லை தொடங்கி மறு எல்லை வரை அனைத்தையும் திடமாகவும் துணிவாகவும் இனிதே நடத்தி வரும் உன்னதரின் திருவாயினின்று புறப்படும் ஓ ஞானமே, நீதியின் பாதையையும், உண்மையின் வழியையும் எமக்கு கற்பித்தருளும், ஆண்டவரே!
ஆமென்.

## ஓ முன்மொழிப் பாடல் 3

*ஓ வாரும் வாரும் வல்ல* ***ஆண்டவரே***
*முற்காலம் சீனாய் மலைமீதிலே*
*எக்காளம் மின்னலோடு தேவரீர்*
*பிரமாணம் இஸ்ராயேலுக்களித்தீர்.*
*மகிழ்! மகிழ்! இமமானுவேல்*
*இஸ்ராயலே உன் மீட்பர் வருகிறார்*

முதல்வர்: **இயேசுவே மரியே,**

எல்லோரும்: **இயேசு மரி சூசை** (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கு தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக, தொடக்கத்தில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக, ஆமென்.

**மன்றாடுவோமாக**

ஆண்டவராகிய இயேசுவே,
விரைந்து வாரும். காலம் தாழ்த்தாதேயும்.
அளவற்ற நிறை வல்லமையே, இஸ்ராயெல் வீட்டாரின்
தலைவரே! மோசேக்கு முட்புதரின் நடுவே தீப்பிழம்பில் தோன்றினீரே!
மக்களுக்கு அவர் மூலம் சீனாய் மலையில் திருச்சட்டத்தை
கொடுத்து, வழி நடத்தினீரே.
ஓ ஆண்டவரே, உமது திருக்கர வல்லமையோடு எம்மை மீட்க
வந்தருளும், ஆமென்.

## ஓ முன்மொழிப் பாடல் 4

*ஓ வாரும், வாரும், **ஈசாயின் துளிரே***
*அலகையின் துன்பம் என்றும் நீக்குமே*
*நரகினின்றெம்மை இரட்சித்தருளுமே,*
*சாவினின்றெம்மை மீட்டருளும்*
*மகிழ்! மகிழ்! இம்மானுவேல்*
*இஸ்ராயலே உன் மீட்பர் வருகிறார்*

முதல்வர்: **இயேசுவே மரியே,**

எல்லோரும்: **இயேசு மரி சூசை** (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கு தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக,
தொடக்கத்தில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக, ஆமென்.

**மன்றாடுவோமாக**

ஆண்டவராகிய இயேசுவே,
விரைந்து வாரும். காலம் தாழ்த்தாதேயும்.
மக்கள் அனைவர்க்கும் அடையாளமாக ஈசாயின் அடிமரத்திலிருந்து
துளிர்க்கும் ஓ ஈசாயின் தளிர் தண்டே! உமது திருமுன் அரசர்கள்
மௌனம் காப்பார்களாக! மக்கள் மண்டியிடுவார்களாக!
தாமதிக்காமல் அடியோர்களை மீட்க வந்தருளும் ஆண்டவரே.
ஆமென்.

## ஓ முன்மொழிப் பாடல் 5

*ஓ வாரும் தாவீதின் திறவுகோலே*
*விண் வாசலைத் திறந்து தாருமே*
*ஒடுக்கமாம் நல் வழி காத்திடுமே,*
*விசாலமாம் துர்ப் பாதை தூர்த்திடுமே.*
*மகிழ்! மகிழ்! இம்மானுவேல்*
*இஸ்ராயலே உன் மீட்பர் வருகிறார்*

முதல்வர்: **இயேசுவே மரியே,**

எல்லோரும்: **இயேசு மரி சூசை** (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கு தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக,
தொடக்கத்தில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக, ஆமென்.

**மன்றாடுவோமாக**

ஆண்டவராகிய இயேசுவே,
விரைந்து வாரும். காலம் தாழ்த்தாதேயும்.
ஓ தாவிதின் திறவுகோலே! இஸ்ராயேல் வீடு செங்கோலே!
நீர் திறந்துவிட்டால், எவராலும் பூட்ட இயலாது.
நீர் பூட்டி விட்டால், எவராலும் திறக்க இயலாது அல்லவா!
அடிமைத்தனங்களினால் கட்டுண்டிருப்பவர்களை
விடுவிக்கவும், இருளிலும் சாவின் நிழலிலும் இருப்பவர்களை
மீட்கவும் விரந்து வாரும், ஆண்டவரே! ஆமென்.

## ஓ முன்மொழிப் பாடல் 6

*ஓ வாரும் வாரும் விடிவெள்ளியே*
*எம் நெஞ்சை ஆற்றித் தேற்றுடுமே*
*இருண்ட மேகம் நீக்கிடுமே*
*சாவிருள் நிழல் ஓட்டிடுமே*
*மகிழ்! மகிழ்! இம்மானுவேல்*
*இஸ்ராயலே உன் மீட்பர் வருகிறார்*

முதல்வர்: **இயேசுவே மரியே,**

எல்லோரும்: **இயேசு மரி சூசை** (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கு தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக,
தொடக்கத்தில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக, ஆமென்.

**மன்றாடுவோமாக**

ஆண்டவராகிய இயேசுவே,
விரைந்து வாரும். காலம் தாழ்த்தாதேயும்.
ஓ அதிகாலை விண்மீனே! விடியற்காலை நற்சத்திரமே!
காலையில் எழும் ஞாயிரே! முடிவில்லா ஒளியின் சுடரே!
நீதியின் கதிரவனே! இருளிலும், இறப்பின் விளிம்பிலும்
துயருறுபவர்களை தேற்றிட வாரும், ஆண்டவரே! ஆமென்.

## ஓ முன்மொழிப் பாடல் 7

*ஓ வாரும் வாரும் உலகின் ஏக்கமே*
*மனுக்குலத்தை அன்பால் ஒன்றாய் பிணைக்குமே*
*எம் சோகப்பிரிவை நீக்கச் செய்யுமே*
*அமைதியின் அரசாய் நீரே வாருமே*
*மகிழ்! மகிழ்! இம்மானுவேல்*
*இஸ்ராயலே உன் மீட்பர் வருகிறார்*

முதல்வர்: **இயேசுவே மரியே,**

எல்லோரும்: **இயேசு மரி சூசை** (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கு தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக,
தொடக்கத்தில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக, ஆமென்.

**மன்றாடுவோமாக**

ஆண்டவராகிய இயேசுவே,
விரைந்து வாரும். காலம் தாழ்த்தாதேயும்.
ஓ மக்கள் அனைவரும் அன்புடன் ஏங்கும் மன்னரே!
அனைவரையும் ஒன்றாய் இணைக்கும் மூலைக்கல்லே!
மண்ணிலிருந்து நீ உருவாக்கிய மனிதனை மீட்க
மண்ணகம் வந்தருளும், ஆண்டவரே! விரைந்து வந்தருளும்,
ஆமென்.

## நவநாள் ஜெபம்

ஓ பேரன்புக்குரிய இயேசுவே! கருணையோடு நேசிப்பவரே! எங்கள் மத்தியில் வாழ்வதிலும் உமது ஆசீர்வாதத்தை பொழிவதிலுமே நீர் பெருமகிழ்வு எய்துகின்றீர் அடியேன் தகுதியற்றவனாயிருந்தும் என்னை அன்போடு அணைத்து கருணையோடு மன்னித்து என்மேல் உமது முழு வல்லமையையும் செலுத்துவதால் ஓ அன்பான குழந்தை இயேசுவே உம்மிடத்தில் ஈர்க்கப்பட்டவனாய் நிற்கிறேன். தேவரீரிடம் முழு விசுவாசத்தோடு வந்த அநேகர் தமது விண்ணப்பங்கள் அருளப் பட்டிருக்கிறார்கள் உமது பீடத்தின் புதுமை மிக்க உமது திருச் சுரூபத்தின் முன் பக்தியோடு முழுங்தாழில் நின்று என் இதயத்தை திறந்து எனது மன்றாட்டுகளையும் விண்ணப்பங்களையும் நம்பிக்கையோடு சமர்ப்பிக்கின்றேன்.......... எனது முக்கியமான பிரச்சனைகளை உமது கனிவான இதயத்திலே ஒப்படைக்கின்றேன் உமது பரிசுத்த சித்ததிலும், ஞானத்திலும், அன்பிலும் எல்லா நியமமும் நன்மைக்கே என்பதால் என்னை ஆண்டு வழிநடத்தும். முழு வல்லமையுள்ள கிருபை மிகு குழந்தை இயேசுவே! எம்மை புறக்கணிக்காமல் எங்களை பாதுகாத்து என்றென்றைக்கும் ஆசீர்வதித்தருளும். இனிமையிலும் இனிய குழந்தை இயேசுவே! மிக்க கருணையோடும் மென்மையோடும் உம்மை கருத்தாய் பேணி காத்த திரு நிறை அன்னை மரியாளின் பெயராலும் மிகுந்த பயபக்தியோடு தமது கரங்களில் உம்மை ஏந்திய புனித சூசையப்பரின் பெயராலும் அடியேனை ஆறுதல் படுத்தி மகிழ் வுறச் செய்யும். அதனால் அடியேன் உருகும் என் இதயத்தினால் தேவரீருக்கு நன்றி செலுத்தி என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன். ஆமென்.

## குழந்தை இயேசு புகழ் மாலை

**முதல்வர்: ஆண்டவரே இரக்கமாயிரும்...**

எல்: ஆண்டவரே இரக்கமாயிரும்

**முதல்வர்: கிறிஸ்துவே இரக்கமாயிரும்...**

எல்: கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

**முதல்வர்: ஆண்டவரே இரக்கமாயிரும்...**

எல்: ஆண்டவரே இரக்கமாயிரும்.

**முதல்வர்: கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

எல்: கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கனிவாகக் கேட்டருளும்.

**முதல்வர்: வானகத் தந்தையாகிய இறைவா...**

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

**முதல்வர்: உலகை மீட்ட மகனாகிய இறைவா...**

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

**முதல்வர்: தூய ஆவியாகிய இறைவா...**

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

**முதல்வர்: மூவொரு கடவுளாகிய இறைவா...**

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

**முதல்வர்: வானகத் தந்தையாகிய இறைவா...**

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

**முதல்வர்: உலகை மீட்ட மகனாகிய இறைவா...**

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

**முதல்வர்: தூய ஆவியாகிய இறைவா...**

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

**முதல்வர்: மூவொரு கடவுளாகிய இறைவா...**

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

- தூய மரியே, இறைவனின் தாயே…
- புனித சூசையப்பரே
- அசிசியின் புனித பிரான்சிஸ்குவே
- அசிசியின் புனித கிளாரம்மாளே
- புனித அந்தோணியாரே
- புனித தேவசகாயம் அடிகளாரே
- புனித ஜோசப் வாஸ் அடிகளாரே
- புனித அருளானந்தர் அடிகளாரே
- புனித கூரியாகோஸ் அடிகளாரே
- புனித தோமா அடிகளாரே
- புனித அல்போன்சம்மாளே
- புனித அன்னை தெரேசம்மாளே
- முக்தி பேறு பெற்ற புனித கார்லோஸ் அடிகளாரே

எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்!

- அற்புதக் குழந்தையாகிய இயேசுவே…
- வியத்தகு முறையில் செயல்படும் ஒப்பற்ற வல்லமையுடைய அற்புதக் குழந்தை இயேசுவே…
- எங்கள் எண்ணத்தையும் உள்ளத்தையும் ஆய்ந்தறியும் ஞானமுடைய அற்புதக் குழந்தை இயேசுவே…
- எங்களுக்கு உதவிட என்றும் விரைந்துவரும் நன்மனமுடைய அற்புதக் குழந்தை இயேசுவே…

எங்கள் மேல் இரக்கமாயிரும்!

- வாழ்க்கையின் முடிவுக்கும், கடைசி கதிக்கும் உமது பராமரிப்பால் எங்களை நடத்திச் செல்லும் அற்புதக் குழந்தை இயேசுவே...
- உமது உண்மையின் ஒளியால் எங்கள் இதயத்தின் இருளை ஓட்டும் அற்புதக் குழந்தை இயேசுவே...
- எங்கள் வறுமையை ஒளிக்கும் கொடை வள்ளலாகிய அற்புதக் குழந்தை இயேசுவே...
- துன்புறுவோரைத் தேற்றும் நட்புறவுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...
- முதல்வர்: உமது இரக்கத்தால் எங்கள் பாவங்களை மன்னிக்கும் அற்புதக் குழந்தை இயேசுவே...
- முதல்வர்: எங்களைத் திடப்படுத்தும் வல்லமையுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...
- தீமைகளை எல்லாம் அகற்றும் ஆற்றலுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...
- உமது நீதியால் பாவத்திலிருந்து எங்களைத் தடுத்தாட்கொள்ளும் அற்புதக் குழந்தை இயேசுவே...
- நரகத்தை வெல்லும் திறமையுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...
- எங்கள் இதயங்களைக் கவரும் எழில் வதனமுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...
- உம் கையில் உலகத்தை ஏந்தும் பேராற்றலுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...

எங்கள் மேல் இரக்கமாயிரும்

- ஆர்வமற்ற எங்கள் உள்ளங்களை உமது அன்புத் தீயால் பற்றி எரியச் செய்யும் அற்புதக் குழந்தை இயேசுவே...
- எல்லா நன்மைகளாலும் எங்களை நிரப்பும் அற்புதக் குழந்தை இயேசுவே...
- ஆசீரை அளிக்கின்ற அற்புத கரமுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...
- பக்தர்களின் உள்ளங்களை மகிழச்செய்யும் இனிய பெயருடைய அற்புதக் குழந்தை இயேசுவே...
- உலகை எல்லாம் நிரப்பும் மாட்சிமையுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...

**முதல்வர்: கருணை கூர்ந்து...**

எல்: எங்களைப் பொறுத்தருளும் இயேசுவே.

**முதல்வர்: கருணை கூர்ந்து...**

எல்: எங்கள் மன்றாட்டைக் கனிவாய் கேட்டருளும் இயேசுவே.

எங்களை காத்தருளும் இயேசுவே.

- எல்லாத் தீமையிலிருந்து...
- எல்லாப் பாவத்திலிமிருந்தும், அளவற்ற உம் நன்மைக்கு எதிராக எழும் எல்லா அவ நம்பிக்கையிலுமிருந்தும்...
- அற்புதம் புரியும் உமது ஆற்றலுக்கு எதிராக எழும் எல்லா சந்தேகத்திலுமிருந்தும்...
- உமது வழிபாட்டில் ஏற்படும் எல்லாக் குறைபாட்டிலுமிருந்தும்...
- எல்லாத் தீமையிலும், கேட்டிலுமிருந்தும்...

- உமது கன்னித் தாய் தூய மரியாள், வளர்ப்பு தந்தை தூய யோசேப்பு, இவர்களின் பரிந்துரை வழியாக எங்களை நீர் மன்னிக்க வேண்டுமென்று...
- உமது திருக்குழந்தைப் பருவத்தின் மேல் எங்களுக்குள்ள அன்பையும், பக்தியையும் காத்து வளர்த்திட வேண்டுமென்று...
- உமது அற்புதத் திருக்கரம் எங்களை விட்டு விலகாதிருக்க வேண்டுமென்று...
- உமது எண்ணற்ற நன்மைகளை நாங்கள் என்றும் மறவாதிருக்க வேண்டுமென்று...
- உமது திரு இருதய அன்பால் எங்கள் உள்ளங்களை மேன்மேலும் பற்றி எரியச்செய்ய வேண்டுமென்று...
- உம்மை நம்பிக்கையோடு கூவியழைப்போரின் குரலுக்குக் கனிவாய்ச் செவிமடுக்க வேண்டுமென்று...
- எங்கள் நாடு என்றும் அமைதியில் நிலைத்திருக்க அருள்தர வேண்டுமென்று...
- எல்லாத் தீமையிலிருந்தும் எங்களை விடுவித்தருள வேண்டுமென்று...
- உமது பக்தியிலே நிலைத்திருக்கும் அனைவருக்கும் நிலைவாழ்வை அளித்தருள வேண்டுமென்று...
- இறுதித் தீர்வை நாளிலே எங்களை இரக்கத்துடன் தீர்ப்பிட வேண்டுமென்று...
- உமது அற்புதத் திரு உருவத்தின் வழியாக நீர் எங்களுக்கு ஆறுதலாகவும், அடைக்கலமாகவும் இருக்க வேண்டுமென்று..

உன்னை மன்றாடுகிறோம்.

**முதல்வர்:** இறை மகனே, மரியின் மகனே, இயேசு கிறிஸ்துவே!
எல்: உம்மை மன்றாடுகிறோம்.
**முதல்வர்:** உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல்: எங்கள் பாவங்களைப் மன்னித்தருளும்.
**முதல்வர்:** உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல்: எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
**முதல்வர்:** உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

செபிப்போமாக

அற்புதக் குழந்தை இயேசுவே! அமைதியற்ற எங்கள் உள்ளங்களின் மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளுமாறு தாழ்ந்து, பணிந்து, வணங்கி மன்றாடுகிறோம். இரக்கமே உருவான உம் இனிய இதயம், எங்கள் செபத்தைக் கனிவோடு ஏற்று, உருக்கமாக நாங்கள் மன்றாடும் இந்த வரங்களை அளித்தருளுமாறு பணிவோடு உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம். எங்களை வாட்டி வதைக்கும் துன்பத் துயரங்களையும், வேதனைச் சோதனைகளையும் நீக்கி, உமது ஆறுதலையும் ஆதரவையும் பெற்று, தந்தையோடும், தூய ஆவியாரோடும் என்றென்றும் நாங்கள் உம்மை வாழ்த்திப் போற்ற வரம் அருளும்.

எல்: ஆமென்.